தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

புதன்கிழமை, 1975 நவம்பர் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 186, 187 ஆகியவை சேர்ந்தாற்போல் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

Raffle scheme

* 186 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state the amount obtained by the Government through the Raffle Scheme during 1974 ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் கிடைத்த நிகர வருவாய் ரூ. 1,42,63,807.

* 187 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டில் விற்பனை செய்யப் படும் பரிசுச்சீட்டுகளை தடை செய்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாட்டில் பரிசுச் சீட்டுகளின் விற்பனை நிறுத்தப்படும் என்ற அறிவிப்பினையொட்டி பரிசுச் சீட்டுகள் விற்பனை குறித்து இம் மாநிலத்துடன் பரிமாற்ற

ஏற்பாடுகள் செய்து கொண்டுள்ள 13 மாநிலங்களுக்கு, தமிழ் நாட்டில் அம்மாநிலங்களின் பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்வதற்கு 15—9—1975 முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது குறித்து இந்த அரசு தெரியப்படுத்தியுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, பீகார் உட்பட மற்ற மாநிலங்களின் ராபிள் டிக்கட்டுகள் இந்த மாநிலத்தில் விற்கப்படுகின்றன. பாங்குகளிலே இன்ஸென்டிவ் கொடுத்து ராபிள் டிக்கட் முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்போது, நம் மாநிலத்தில் மட்டும் 23 கோடி ரூபாயை இழக்க நாம் எவ்வாறு ஒத்துக்கொண்டோம்? சர்க்காருக்கு இது பெரிய நஷ்டம் அல்லவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆண்டொன்றுக்கு 23 கோடி ரூபாய் அல்ல. 1967-ம் ஆண்டில் ஆரம்பித்ததிலிருந்து மொத்தமாக இதுவரையிலும் உள்ள நிகர வருமானம்தான் 25 கோடி ரூபாய். இப்பொழுது ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் அளவுக்குத்தான் நாம் வருமானத்தை இழக்கிறோம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இவ்வாறு தடை செய்யப்பட்ட பிறகும்கூட சென்னை நகரில் வெளி மாநிலத்திய பரிசுச் சீட்டுகள் பல இடங்களில் பகிரங்கமாக விற்கப்பட்டு வருகின்றன. அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட தடை யுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஒரு நான்கைந்து பேர் அரசாங்கத்தினுடைய உத்தரவை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார்கள். உயர்நீதிமன்றத்தால் இடைக்கால தடை விதிக்கப்பட்டு, இதுவரை வெளி மாநிலத்திய பரிசுச் சீட்டுகளை அவர்கள் வாங்கியிருந்தால் அதை விற்று முடிகிற வரையில் அவர்கள் அதை விற்பதற்கான உரிமை அளிக்கப் பட்டிருக்கிறது. மேலும் தொடர்ந்து அவர்கள் விற்பதற்கு இயலாது.

திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நலன் கருதியும், நாட்டிலே இருக்கின்ற ஏழை மக்களுடைய நலன் கருதியும் நம்முடைய முன்னாள் முதலமைச்சர்

1975 நவம்பர் 5]

பேரறிஞர் அண்ணா அவர்களால் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. மேலும், யாரையும் கட்டாயப்படுத்தி பணம் வசூலிக்காத திட்டமாகவும் இருந்தது. விரும்புகிறவர்கள்தான் இந்த லாட்டரி சீட்டை வாங்கிக் கொள்ளும் நிலைமை இருக்கிறது. மேலும், இதனால் நாட்டுக்கு நல்ல வருமானம் கிடைப்பதால் மீண்டும் தமிழகத்தில் பரிசுச் சீட்டு விற்கின்ற வகைக்கு வேண்டிய ஏற்பாடுகளை நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதுபற்றி பேரறிஞர் அண்ணா அவர்களையே, 'மிகப் பரபரப்பாக இந்தப் பரிசுச் சீட்டு விற்பனையாகிறது; ஆகவே, மக்கள் பெரிதும் இதனால் கவரப்படுகிறார்கள்; இதிலிருந்து மக்களை வேறு பக்கம் திசை திருப்பவேண்டும்', என்று கேட்டபோது, அண்ணா அவர்களே சொன்னது நன்றாக ஞாபகம் இருக்கிறது. "ஆரம்பத்தில் இப்படித்தான் பரபரப்பாக இருக்கும்; போகப் போக கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்ந்துவிடும்" என்று சொன்னார்கள். அதற்கேற்ப, ஆரம்பத்தில், 1968-69-இல் 70 வரிசைகள் வெளியிட்டதற்கு மாறாக இப்போது 19 வரிசைகள்தான் வெளியிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அண்ணா விருப்பம்போல் அது தேய்ந்து, பிறகு அறவே நிறுத்தப்பட்டுவிட்டது.

திரு. எம். சுரேந்திரன்: முதன் முதலாக மற்றவர்கள் பரிசுச் சீட்டு ஆரம்பிக்காதபோது, 1967-இல் தமிழ்நாட்டில் பரிசுச்சீட்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு வங்கிகள் போன்ற ஸ்தாபனங் களும் மற்றப் பல்வேறு ஸ்தாபனங்களும் பரிசுச்சீட்டுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மற்றவர்கள் செய்யாத ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்ற விருப்பத்திலே இது செய்யப் பட்டது என்பது தெரியும். இருந்தாலும், மற்றவர்களெல்லாம் பாராட்டுகிற, நல்ல வருமானமுள்ள, ஜனங்களுக்கு உதவுகிறது என்று நினைத்துச் செய்கின்றபோது, இந்த அரசு இதை நிறுத்தி விடுவது, மற்றவர்கள் செய்வதை விரும்பாத நிலையைக் காட்டுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு விடையளிக்கத் தேவையில்லை.

[1975 நவம்பர் 5

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வாயிலாகக் கிடைத்த பல கோடி ரூபாயைக் கொண்டு தமிழகத்தில் பல நல்ல திட்டங்களையெல்லாம் இந்த அரசு நிறைவேற்றி யிருக்கிறது. இப்பொழுது அதற்கான வழிவகை இல்லாமல் போய்விட்டது. அதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் அரசு வைத்திருக்கிறதா? இந்த வருவாயை ஈடு செய்வதற்கு மத்திய அரசாங்கத்திடம் ஏதாவது நிதி உதவி கேட்க அரசு முன்வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மதுவிலக்கை ஒத்திவைத்ததன் மூலமாக 58 கோடி ரூபாய் கிடைத்தது. அந்த ரூபாயை வைத்து நல்ல காரியங்கள் செய்தோம். இருந்தாலும், மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கொள்கை என்ற காரணத்தால் அதை அமல்படுத்தியிருக்கிறோம். அதுபோலவேதான் பரிசுச் சீட்டையும் இப்பொழுது நாம் எடுத்திருக்கிறோம். நல்ல கொள்கை என்பதற்காக செயல்படுத்தி யிருக்கிறோமே அல்லாமல் வேறல்ல. இந்தியாவிலேயே குஜராத்திலும் தமிழகத்திலும்தான்—இந்த இரண்டு மாநிலங் களிலும்தான் காந்தியடிகளுடைய நெறிமுறைகள் பின்பற்றப் படுகின்றன என்பதற்கு அடையாளமாக இத்தீமைகள் ஒழிக்கப் பட்டிருக்கின்றன. இந்த இழப்பை ஈடு செய்வதற்கு வேறு திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதுபற்றி அரசு யோசிக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, though the Raffle scheme has been given up at the State level, yet in the districts of Dharmapuri and Ramanathapuram, the Government have proposed to start Development Corporations which require a lot of money. So, may I know whether the Hon. Chief Minister will permit the District Collectors there to run the Raffle scheme at the district level?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்காக கார்ப்பரேஷன் அமைக்கப்படுகிறது. அந்தக் கார்ப்பரேஷனுக்கு இப்படிப்பட்ட முறையில் திட்டம் தேவை இல்லை.

1975 நவம்பர் 5]

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டுத் திட்டத்தினால் பயன் அடைந்தவர்கள் சில மக்களாக இருந்தபோது, அதனால் பாதிக்கப்பட்டவர்கள் பல இலட்சக்கணக்கான பேர் இருந்தார்கள் என்ற விவரத்தை மக்களுக்குக் கூறி, பரிசுச் சீட்டு ஒழிப்புத் திட்டம் மிகச் சாலச்சிறந்தது என்று எடுத்துக்காட்டி, மத்திய அரசிடமிருந்து இதற்காக நிதி உதவி பெற அரசு மேலும் முயற்சிகள் எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய அரசிடமிருந்து மதுவிலக்குத் திட்டத்திற்கே நம்மால் உதவி பெற முடியாமல் இருக்கும்போது, இதைப்பற்றி எண்ணுவதுகூட பாவம் என்று மத்திய அரசு கருதும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தத் திட்டம் 1966-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் எவ்வளவு நிகர வருமானம் வந்தது என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் 1968-69-இல் நிகர வருவாயாக ரூ. 4,60,41,000 வந்தது. 1969-70-இல் ரூ. 3,70,81,000 வந்தது. 1970-71-இல் ரூ. 4,36,05,700 வந்தது. 1971-72-இல் ரூ. 4,31,51,000 வந்தது. 1972-73-இல் நாஷனல் டிபென்ஸ் பண்டுக்காக ரூ. 2,12,32,600-ம், அதன்னியில் இன்னொரு குலுக்சல் மூலமாக ரூ. 96,83,800-ம் நிகர இலாபமாக வந்தது. 1973-74-இல் ரூ. 1,20,83,500 கிடைத்தது. 1974-75-இல் 1,08,36,683 வந்தது. 1975-76-இல் செப்டம்பரில் நிறுத்தப்படுகிற வரையில் ரூ. 72,86,141 கிடைத்தது.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு அமோகமாக விற்றபோது, இது பெரிய சூதாட்டம் அல்லவா என்று பேசியவர்கள் எல்லாம், இதை நாம் ஒழித்த பிறகு இது நல்ல திட்டமாயிற்றே என்று பேசுவது அரசுக்குத் தெரியுமா? இந்தத் திட்டத்தின் மூலம் கிடைத்த வருமானத்தை எந்தெந்த நற்பணிகளுக்குச் செலவிட்டிருக்கிறார்கள் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நடந்தால் ஒன்று பேசுவதும், நடக்காவிட்டால் ஒன்று பேசுவதும் அரசுக்கு மாத்திரம் அல்ல, அனைவருக்கும் தெரியும். தொடக்கப் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவது, கிராமப்பகுதியில் மருத்துவ மனைகளை ஏற்படுத்துவது, கண்ணிழந்தவர்களுக்கு, உடல்

[1975 நவம்பர் 5

ஊனமுற்றோர்களுக்கு, பிச்சைக்காரர்களுக்கு உதவுவது போன்ற சமூக நலத் திட்டங்களுக்கு என்று இதுபோன்ற இந்தக் காரியங்களுக்கு இவை பயன்படுத்தப்பட்டன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தப் பரிசுத் திட்டத்தினால் பல ஏழைகள் லட்சாதிபதிகளாகியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இந்தத் திட்டத்தை ஒழிக்க வேண்டுமென்று சொன்னார்கள் என்பதற்காக இதை ஒழித்திருப்பதாகச் சொல்லுவது முரண்பாடாக இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அண்ணா அவர்களுக்கும் ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கும் முரண்பாடு இல்லை. அண்ணா அவர்களே, கூடியவிரைவில் அரசியலுக்கு வரவேண்டுமென்று ஜெயப்பிரகாஷ் நாராயணை அழைத்திருக்கிறார்கள். இதில் முரண்பாடு எதுவும் கிடையாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பரிசுச் சீட்டை ஒழிக்கவேண்டுமென்று மூதறிஞர் ராஜாஜி போன்றவர்கள் வற்புறுத்தி வந்தார்களே, அதை மனதில் கொண்டுதான் இதை எடுத்துவிட்டார்களா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நேற்றே இதுபற்றிச் சொன்னேன். திரு. ராஜாஜி சொன்னதை மனதில் வைத்துத்தான், ராஜாஜி நினைவாலயம் திறந்து வைக்கப்படுகிற நேரத்தில் இந்த அறிவிப்பைச் செய்தது.

திரு. அ. தேவேந்திரன் : பரிசுச் சீட்டை நடத்திக்கொண்டிருந்தபோது மத்திய சர்க்கார் லட்சம் லட்சமாக வரியாகப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். இப்போது நிறுத்திவிட்டோம். இதனாலே நமக்கு நஷ்டம் ஏற்படுகிறதென்று சொல்லி, மத்திய அரசின் மானியத்தைப் பெற நமது அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த வரியை அவர்கள் நம்மிடம் இருந்து பெறவில்லை. யாருக்கு லட்சம் ரூபாய் பரிசு விழுந்ததோ அவர்களிடம் இருந்து பெற்றார்கள்.

1975 நவம்பர் 5]

திரு. ஏ. சுப்பிரமணியம் : பரிசுச் சீட்டின் வரவினால் பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். அதை நிறுத்த முடிவு செய்தபோது முதலமைச்சரே நிதியமைச்சராக இருக்கிற காரணத்தினால் நன்கு ஆராயாமல் ஜெயப்பிரகாஷ் நாராயணுக்குக் காணிக்கையாக மட்டும் இதனைச் செய்திருப்பார் என்று நம்பமுடியவில்லை. இதற்கு மாற்று ஏற்பாடுகளை அரசு எண்ணியதா? அப்படியானால் அந்த மாற்று ஏற்பாடுகள் என்ன என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாற்று ஏற்பாடுகள் எது என்று இப்போது அறிவிப்பது சரியல்ல. என்றாலும் மாற்று ஏற்பாடுகள் இப்படிப்பட்ட வகையில் அமையாமல் இருக்கவேண்டுமென்பது அரசின் கொள்கை.

திரு. வை. பாலசுந்தரம் : மக்களின் நலன் கருதி இந்தத் தீவிர நடவடிக்கையில் நமது அரசு ஈடுபட்டுள்ளதே, இதைப்பின்பற்றி வேறு எந்த மாநிலமாவது இதை வரவேற்று இதுபோன்ற நடவடிக்கையை எடுத்துள்ளதா? அப்படியில்லையென்றால் மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு நமது முதலமைச்சர் எழுதி, இதுபோன்ற நடவடிக்கையில் அவர்களும் ஈடுபட முயற்சி செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காந்தியின் நேரடி வாரிசு என்று சொல்லிக்கொள்கிற காங்கிரஸ்காரர்கள் ஆளுகின்ற பல மாநிலங்களிலேயே ஏழைகளின் நலனுக்காக மதுவிலக்கு அமல் செய்யப்படவேண்டும் என்கிற கொள்கையிலேயே தாங்கள் அதைப் பின்பற்ற முடியாது என்று சொல்லிவிட்ட நேரத்திலே இந்தத் திட்டத்தையா மற்ற மாநிலங்கள் பின்பற்ற முன்வரப் போகின்றன?

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Chief Minister why Rajaji's advice was not heeded in the beginning when all along he was against Raffle Scheme?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலில் சொல்லி கேட்காத காரணத்தினால் இறுதிவரையில் கேட்காமல் இருந்துவிட வேண்டுமென்று பொருள் இல்லை.

திரு. மு. சண்முகம் : 'நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை, அன்றே ஒழிய விடல்' என்கிற வள்ளுவரின் வாக்கை அரசு கடைப்பிடிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அன்றே இல்லாவிட்டாலும், என்றோ ஒருநாள் கடைப்பிடிக்கும் என்பதற்கு அடையாளம்தான் இது.

Public Works Corporation

* 188 Q.—THIRU B. VENKATASAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under examination of the Government to set up a Public Works Corporation for the State; and

(b) if so, the details htereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) & (இ) ஆம். சென்னையில் உள்ள அரசினர் பொறியியற் பணிப் பட்டரைகள், மற்றும் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தின் கீழ் ஆளியாறு நகரில் செயல்பெற்று வரும் பொறியியற் பணிப் பட்டரை, இவை திறம்படவும், வணிக முறையிலும் இயங்குவதன் நிமித்தம் "தமிழ் நாடு பொதுப்பணி பொறியியற் கூட்டு நிறுவனம்" என்ற பெயரில் ஒரு அமைப்பினை நிறுவ அரசு உத்தரவிட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whethei other works will be included in this Public Works Corporation, apaart from the works mentioned by the Minister ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இது பொதுப்பணித்துறை நடத்துகின்ற நிறுவனமாகும். தனியார் வேலை கொடுத்தாலும், மற்றத் துறைகள் கொடுப்பார்களானாலும் இங்கே அந்த வேலைகளைச் செய்து கொடுக்க முடியும்.